**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section-154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

# Under Section 173 BNSS

C 8167290

1. District மாவட்டம்: Thiruvallur. PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு: 2024 FIR No.: மு.த.அ. எண்: 11/AC/2024/TVL. Date: நாள்: 11-07-2024 at 18.00 hrs

2. (i) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a), 7A & 8 of PC Act, 20..

   (iii) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 406, 420 and 466 IPC r/w 109 IPC

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் June/2019 at about 16.00 hrs. Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் X April-May/2020 at about 15.00 hrs. Time to : நேரம் வரை near the Thiruttani Railway Station.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03-01-2023. Time : நேரம் —

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11-07-2024 Time : நேரம் at about 18.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக On findings of preliminary Enquiry.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் West - about 40 kms.

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Near the Thiruttani Railway station, Thiruvallur District.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : — இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.S. Tamizharasi (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் C. Subramanian

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49 years (d) Nationality : நாட்டினம் Indian. (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் Inspector of police (g) Address : முகவரி Vigilance and Anti-Corruption, Thiruvallur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   - Separate sheet attached.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   Conducted preliminary Enquiry vide PE 110/2022/EDU/TVL.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது</u>:- காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களின் அலுவலக செயல்முறையின்படி முதல் நிலை விசாரணை நடத்த உத்தரவிட்டதன்படி, முதல் நிலை விசாரணை எண். PE 110/2022/EDU/TVL பதிவு செய்யப்பட்டு, ஆய்வு அறிக்கையில் சொல்லப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டதன் முடிவாக, எதிரிகள் தொடர்பான குற்றச்செயலுக்கான முகாந்திரம் உள்ளது என தெரியவந்ததால், எதிரிகளுக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்ய, ஊழல் தடுப்பு சட்டத்தின்படி உயர் அதிகாரியின் முன் அனுமதி பெறப்பட்டு, என்னால் இவ்வழக்கினை பதிவு செய்யப்பட்டது. அதன் விவரம் வருமாறு:-

[FIR Contents continue to the next page

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G.S. TAMIZHARASI Rank ...INSPECTOR to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......V&AC, Thiruvallur.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[Signature] 11/7/2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[Signature] 11/7/2024

15. Date & Time of despatch to the court: 12-07-2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at about 09.00hrs

Name: பெயர் G.S. TAMIZHARASI,
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண் ..........
V&AC, THIRUVALLUR.

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.11/AC/2024/TVL, U/s. 7(a), 7A & 8 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 and 406,420 & 466 IPC r/w. 109 IPC., continues......)**

| எதிரிகள்: | |
|---|---|
| எதிரி-1 திரு.B.திரு.வெங்கடேசன். வயது-54. த.பெ. பாலன். தலைமையாசிரியர். ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி. கோபாலகிருஷ்ணாபுரம் கிராமம். திருவாலங்காடு ஒன்றியம். திருவள்ளூர் மாவட்டம்.<br><br>எதிரி-2 திரு. S.அருள். வயது-60. த.பெ. சண்முகம். (தற்காலிக பணி நீக்கம்-31.05.2024). பட்டதாரி ஆசிரியர் (தமிழ்). ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி. சிறுகுமி கிராமம். திருத்தணி தாலுக்கா. திருவள்ளூர் மாவட்டம்.<br><br>எதிரி-3 திரு.T.V.வெங்கடேசன். வயது-60. த.பெ. வேணுகோபால். துணை முதல்வர். டாக்டர். பி.கெங்குசாமி நாயுடு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. திருத்தணி. திருவள்ளூர் மாவட்டம் (தனிநபர்),<br><br>எதிரி-4 திருமதி.P.S.தேவிகா. வயது-32. க.பெ. நித்தியானந்தம் (தனிநபர்) ;<br><br>எதிரி-5 திரு.G.P.நித்தியானந்தம். வயது-38. த.பெ. பொன்னுரங்கம். அத்திமாஞ்சேரிப்பேட்டை. பள்ளிப்பட்டு தாலுக்கா. திருவள்ளூர் மாவட்டம். (தனிநபர்) | இதன் மார்ஜினில் கண்ட எதிரி-1 திரு.B.திரு.வெங்கடேசன். தலைமையாசிரியர். ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி. கோபாலகிருஷ்ணாபுரம் கிராமம். திருவாலங்காடு ஒன்றியம். திருவள்ளூர் மாவட்டம் மற்றும் எதிரி-2 திரு. S.அருள். பட்டதாரி ஆசிரியர் (தமிழ்). ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி. சிறுகுமி கிராமம். திருத்தணி தாலுக்கா. திருவள்ளூர் மாவட்டம் ஆகிய இருவரும் அரசு பள்ளிகளில் தலைமையாசிரியராகவும். பட்டதாரி ஆசிரியராகவும் பணிபுரிவதால். இருவரும் ஊழல் தடுப்பு சட்டம். 2018-ன் சட்டப்பிரிவு 2 (C)-ன்படி அரசு ஊழியர்கள் ஆவர். மேலும். எதிரி-3 திரு. T.V.வெங்கடேசன். துணை முதல்வர். டாக்டர். பி.கெங்குசாமி நாயுடு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. திருத்தணி. திருவள்ளூர் மாவட்டம். எதிரி-4 திருமதி.P.S.தேவிகா மற்றும் அவரது கணவர் எதிரி-5 திரு. G.P.நித்தியானந்தம். ஆகியோர்கள் தனிநபர்கள் ஆவர். இவர்களில் எதிரி-3 திரு. T.V.வெங்கடேசன் அவர்கள் எதிரி-1, எதிரி-2 மற்றும் எதிரி-4, - எதிரி ஆகியோர்களுக்கிடையே தரகராக செயல்பட்டுள்ளார். அதாவது அவரது தனியார் பள்ளியில் ஆசிரியர்களாக பணிபுரிந்த எதிரி-4 திருமதி.P.S.தேவிகா மற்றும் அவரது கணவர் எதிரி-5 திரு. G.P.நித்தியானந்தம் ஆகியோர்களுக்கு எதிரி-3-ன் நண்பர் மற்றும் நன்கு பரிச்சையமான நபர்களான எதிரி-1 திரு.B.திரு.வெங்கடேசன் மற்றும் எதிரி-2 திரு. S.அருள் ஆகியோர்களை அறிமுகம் செய்துவைத்து. அரசு ஆசிரியர் வேலையை கிடைப்பதற்கான அனைத்து வேலைகளையும் செய்வார்கள் என்று நம்பும்படியான வார்த்தைகளை கூறி எதிரிகள் 1 3 வரையானவர் இருதவணைகளாக ரூ.12,00,000/-ஐ லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு எதிரி-4 மற்றும் எதிரி-5 ஆகியோர்களை ஏமாற்றிய குற்றவாளிகளாகின்றனர். மேலும். எதிரி-4 மற்றும் 5 இருவரும் எப்படியாவது அரசு ஆசிரியர் பணியை பெற்றுவிட வேண்டும் என்ற அவர்களது சுயலாபத்திற்காக. தாங்கள் கொடுப்பது லஞ்சம் என்ற தெரிந்தே பணத்தை கொடுத்துள்ளதால் குற்றவாளிகளாகின்றனர். |

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.11/AC/2024/TVL, continues......)**

மேலே கண்ட மார்ஜினில் கூறப்பட்ட எதிரி-1 திரு.B.திரு.வெங்கடேசன், தலைமையாசிரியரும், எதிரி-2 திரு. S.அருள், பட்டதாரி ஆசிரியரும் (தமிழ்) அரசு பள்ளிகளில் அரசு அலுவலர்களாக பணிபுரிந்துக்கொண்டே, அவர்களின் நண்பரும், நன்கு பரிச்சையமான , அதாவது எதிரி-1 மற்றும் எதிரி-2 ஆகியோர்களின் பிள்ளைகள் எதிரி-3 அவர்களின் தனியார் பள்ளியில் படித்ததால் ஏற்பட்ட பழக்கத்தின் பேரில், எதிரி-3 திரு. T.V.வெங்கடேசன், திருத்தணி தனியார் பள்ளியின் துணை முதல்வரின் உதவியோடு, மேற்படி தனியார் பள்ளியில் ஆசிரியர்களாக பணிபுரிந்த, எதிரி-4 திருமதி.P.S.தேவிகா மற்றும் அவரது கணவர் எதிரி-5 திரு. G.P.நித்தியானந்தம் ஆகியோர்களிடம் அரசு ஆசிரியர் வேலை வாங்கித்தருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, அரசு ஆணையை பெற்றுத்தருவதாக கூறி எதிரி-4 மற்றும் எதிரி-5 ஆகியோர்களுக்கு எதிரிகள்-1 மற்றும் 2 ஆகியோர்களை அறிமுகம் செய்து வைத்து, இருதரப்பினருக்கும் இடையே எதிரி-3 ஒரு இடைத்தரகராக செயல்பட்டு, எதிரி-1 முதல் எதிரி-3 வரையானவர்களான மூவரும் ஒன்று சேர்ந்து, அவர்களை நம்ப வைப்பதற்கான வார்த்தைகளை கூறி, அவர்களுக்கு தெரிந்த தலைமைச்செயலகத்தில் கல்வித்துறை அமைச்சரிடம் பணிபுரிபவர்கள் மூலம் சிபாரிசு கேட்டு, அரசு ஆசிரியர் வேலையை பெற்றுவிடலாம் என்று கூறியதை நம்பி, எதிரி-4 திருமதி.தேவிகா மற்றும் எதிரி-5 திரு.நித்தியானந்தம் ஆகிய இருவரும், எப்படியாவது அரசு ஆசிரியர் பணியை பெற்றுவிட வேண்டும் என்ற ஆசையில் லஞ்சம் கொடுத்தாவது அரசு ஆசிரியர் பணியை பெற்றுவிட வேண்டும் என்று லஞ்சம் கொடுப்பது தவறு என்று தெரிந்தும், அவர்கள் கையில் வைத்திருந்த சேமிப்பு பணம் மற்றும் அவர்களது உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்களிடம் பணம் ரூ.6,00,000/-ஐ பெற்று அந்தப்பணத்தை கடந்த ஜூன்/2019-ம் மாதத்தில் திருத்தணி ரயில் நிலையம் அருகே மாலை சுமார் 04.00 மணிக்கு மேல் எதிரி-4 மற்றும் எதிரி-5 இருவரும் சேர்ந்து அவர்கள் குறிப்பிட்ட மேற்படி இடத்திற்கு சென்றதில், அங்கிருந்த மூவரும் பணத்தை கொண்டுவந்துள்ளீர்களா என்று கேட்டதற்கு, தாங்கள் கொண்டு வந்துள்ளதாக கூறியபோது, அதனை எதிரி-3 தலைமையாசிரியர் திரு.பி.வெங்கடேசன் பெற்றுக்கொண்டு பொய்யான வாக்குறுதிகளை கூறிவிட்டுச் சென்றுள்ளனர். மேற்படி ரூ.6,00,000/-ஐ எதிரிகள் 4 மற்றும் 5 ஆகியோர்களின் குடும்ப நண்பரான ஆந்திர மாநிலம், நகரி மண்டலம், K.V.R பேட்டை கிராமத்தைச்சேர்ந்த கோனேரி மன்னன் அவர்களின் மகன்களான திரு.கே.எம்.இராஜா மற்றும் திரு.கே.எம்.பாலாஜி ஆகியோர்களிடமிருந்து தலா 2 லட்சம் என மொத்தம் ரூ.4,00,000/-மும், எதிரி-5 அவரது திருத்தணியிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் தனது நகைகளை அடமானம் வைத்து ரூ.1,00,000/-ம் பணத்தைப் பெற்றும் மற்றும் எதிரி-4 மற்றும் எதிரி-5

**(FIR content continues to the next page......)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.11/AC/2024/TVL, continues......)**

ஆகியோர்களின் கையிருப்புத்தொகை ரூ.1,00,000/-யும் சேர்த்து ரூ.6,00,000/-ஐ கொடுத்துள்ளனர். அப்போது ஜூன் 2019-ல் நடந்த **TET Exam**-லும் எதிரி-4 திருமதி.தேவிகா கலந்துக்கொண்டு தேர்வினை எழுதியுள்ளார். அதனால் எப்படியும் முதல் எதிரிகள் மூவர் மூலம் தேர்வில் தேர்ச்சி பெற்று அரசு ஆசிரியர் பணியினை பெற்றுவிடலாம் என நம்பியுள்ளனர். அதன்பின் ஒரு மாதத்திற்குப்பிறகு, எதிரி-4 மற்றும் அவரது கணவர் எதிரி-5 இருவரையும் முதல் எதிரிகள் மூவரும் சென்னைக்கு அழைத்துக்கொண்டு ஒருநாள் தலைமைச்செயலகம் மற்றொரு நாள் அமைச்சரின் வீடு வரை சென்று, அவர்கள் மூவர் மட்டும் உள்ளே சென்றுவிட்டு திரும்பி வந்து அனைவரிடமும் பேசிமுடித்தாகிவிட்டது. எதிரி-4-ன் பெயர் கண்டிப்பாக 2019-ம் ஆண்டிற்கான "சம்" லிஸ்ட்டில் வந்துவிடும் என்று வாக்குறுதியளித்ததாகவும், அதனால் கவலைப்பட வேண்டாம் என்றும் அடுத்த வாரத்தில் ஆணைக்கான நகலை - அனுப்பிவிடுவதாகவும் தெரிவித்ததை எதிரி-4 மற்றும் எதிரி-5 இருவரும் நம்பிக்கொண்டு வந்துள்ளனர். அதன்பின், ஆகஸ்ட்/2019-ல் வந்த **TET Exam**-முடிவில் அவரது பெயர் வரவில்லை என்று எதிரி-4 மற்றும் 5 இருவரும், முதல் மூன்று எதிரிகளிடம் கேட்டதற்கு, விட்டுப்போன லிஸ்ட்டில் கண்டிப்பாக வரும், காத்திருங்கள் என்று கூறியதையும் நம்பியுள்ளனர். அதன்பின் கடந்த 05.02.2020-ந்தேதி எதிரிகள் 1 முதல் 3 வரையானவர்கள், எதிரி-4 மற்றும் எதிரி-5 ஆகிய இருவரையும் அழைத்து, திருமதி.தேவிகாவிற்கான அரசு ஆசிரியர் பணிக்கான ஆணையின் நகல் வந்துள்ளதாகவும், மேற்படி அசல் பணி நியமன ஆணை தபாலில் மற்ற ஆணைகளுடன் வரவேண்டும் என்றால், அதற்கு தனியாக ரூ.6,00,000/-ம் பணத்தை கூடுதலாக பணம் தரவேண்டும் என்று, மேற்படி 1 முதல் 3 வரையான எதிரிகளும் லஞ்சமாக கேட்டு, அவர்கள் கூறிய அரசு ஆசிரியர் வேலைக்கான ஆணையின் நகலை தலைமையாசிரியர் எதிரி-1 திரு.பி.வெங்கடேசன், திருமதி.தேவிகாவிடம் கொடுத்துள்ளார். அந்த ஆணை நகலில், திரு.K.இராஜேந்திரன், பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.06367/W2/31/2020, தேதி.10.02.2020 என்ற ஒரு போலியான அரசு ஆசிரியருக்கான பணி ஆணையை திருமதி.தேவிகா அவர்களின் பெயரில் பதிவாகியுள்ளதை கண்டு எதிரி-4 மற்றும் எதிரி-5 இருவரும் நம்பிக்கொண்டு, அவர்களுடைய உறவினர்களிடம் தங்க நகைகளாகவும், பணமாகவும் கடனாகப்பெற்று ரூ.6,00,000/-ஐ - கடந்த ஏப்ரல்-மே 2020-ம் மாதத்தில் ஒருநாள் மேற்படி பணத்தை அதே திருத்தணி ரயில் நிலையம் அருகில் வைத்து 1 முதல் 3 வரையான எதிரிகளை அவர்களது தகவலின்பேரில் சந்தித்த

**(FIR content continues to the next page......)**

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.11/AC/2024/TVL, continues......)

போது அவர்கள் மூவரும் ஏற்கெனவே கேட்ட கூடுதல் பணம் ரூ.6,00,000/-ஐ கொண்டுவந்துள்ளீர்களா என்று கேட்டதற்கு எதிரி-4 மற்றும் எதிரி-5-ம் கொண்டு வந்துள்ளதாக கூறியபோது, எதிரி-3 திரு.T.V.வெங்கடேசன் முன்னால் வந்து மேற்படி லஞ்சப்பணம் ரூ.6 லட்சத்தை மீண்டும் கேட்டபோது, எதிரி-4 திருமதி.தேவிகா மதியம் சுமார் 03.00 மணிக்கு மேல் கொடுத்துள்ளார். மேற்படி பணம் ரூ.6 லட்சத்தை, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், மத்தூர் கிராமத்தைச்சேர்ந்த திரு.கே.மாணிக்கம் என்பவரின் மகன் திரு.எம்.வெங்கடேசன் என்பவரிடமிருந்து ரூ.1,00,000/-மும், எதிரி-5-ன் தந்தையிடமிருந்து கடனாக பணம் ரூ.2,00,000/-மும், அவரது அண்ணனிடம் கடனாக பணம் ரூ.1,00,000/-மும், எதிரி-4-ன் தந்தையார் மூலமாக அவரது மகளிடம் கடனாகப்பெற்ற ரூ.1,00,000/-ம் மற்றும் அவரது மருமகனிடம் கடனாக பணம் ரூ.1,00,000/- என ஆக மொத்தம் ரூ.6,00,000/-ஐ தயார் செய்து, 3 மாதத்திற்குள் கொடுத்துவிடுவதாகப்பெற்ற பணத்தினை எதிரி-4 அவரது திருத்தணி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாகவும், அவரது தந்தையார் அத்திமாஞ்சேரிப்பேட்டையிலுள்ள எஸ்.பி.ஐ வங்கி மூலமாகவும் நகைகளை அடமானம் வைத்து சிலவற்றை கொடுத்து, அண்டிமாண்டு மூலம் பெற்ற மீதிப்பணத்திற்கு வட்டி செலுத்தி வருகின்றனர். எப்படியும் அரசு ஆசிரியர் வேலையை பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் கடனாகப்பெற்று இருவரும் மொத்தம் ரூ.12,00,000/-(ரூபாய் பன்னிரெண்டு லட்சம்)-ஐ லஞ்சமாக கொடுப்பது தவறு என்று தெரிந்தும் சட்டத்திற்கு புறம்பாக கொடுத்துள்ளனர். அதன்பின், எதிரிகளான 4 மற்றும் 5 ஆகியோர்களுக்கு எந்தவிதமான தகவல் தபாலிலும், தேர்வில் தேர்ச்சி பெற்றதற்கான அறிவிப்பும் வராததால், 1 முதல் 3 வரையான எதிரிகளால் கொடுக்கப்பட்ட அரசு ஆசிரியர் வேலைக்கான பணி நியமன ஆணை குறித்து விசாரித்தபோதுதான், அந்த பணி நியமன ஆணை போலியானது என தெரிய வந்துள்ளது. அதன்பின்னர், எதிரிகள் 4 மற்றும் 5 ஆகிய இருவரும் கொடுத்த லஞ்சப்பணம் ரூ.12 லட்சத்தை திருப்பித்தர கேட்டு, 1 முதல் 3 வரையான எதிரிகளை பலமுறை சந்தித்தும், அவர்கள் மூவரும் சேர்ந்து கொடுத்துவிடுவதாகக்கூறி காலத்தை கடத்தி வந்துள்ளனர். பின்னர், சுமார் ஒரு வருடம் காத்திருந்தும், வேலையும் கிடைக்காமல், பணமும் திருப்பி தராததால், திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் மனுகொடுத்துள்ளனர். அதன்பேரில், திருவள்ளூர் மாவட்ட குற்றப்பிரிவில் 1 முதல் 3 வரையான எதிரிகளுக்கு எதிராக குற்ற எண்.19/2021-ன்படி வழக்கு பதிவுச்செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது, சென்னை உயர் நீதிமன்ற Crl.O.P.No.19115 of 2021-ன் ஆணை

(FIR content continues to the next page......)

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.11/AC/2024/TVL, continues......)**

நாள்-21.10.2021-ன்படி திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் விசாரணை மேற்கொண்டு அறிக்கை அனுப்ப ஆணை பிறப்பித்ததன்பேரில், மேற்படி வழக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரியால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரிகளான, எதிரி-1 திரு.B.திரு.வெங்கடேசன், எதிரி-2 திரு. S.அருள் மற்றும் எதிரி-3 திரு. T.V.வெங்கடேசன், ஆகிய மூவரும் எதிரி-4 மற்றும் எதிரி-5 ஆகியோர்களை ஏமாற்றும் நோக்கத்தோடு, நம்பிக்கை அளிக்கும் வார்த்தைகளை கூறி அவர்களுக்கு போலியான ஒரு பணி நியமன ஆணையை தயார்செய்து, அதை உண்மையென எதிரி 4 மற்றும் 5 ஆகியோர்களிடம் கொடுத்து, அதற்காக லஞ்சமாக ரூ.12,00,000/-ஐ (பன்னிரெண்டு லட்சத்தை) பெற்ற குற்றத்தை புரிந்துள்ளனர். அதேபோல், எதிரி-4 திருமதி.P.S.தேவிகா மற்றும் அவரது கணவர் எதிரி-5 திரு. G.P.நித்தியானந்தம், ஆகிய இருவரும் லஞ்சம் கொடுத்து அரசு ஆசிரியர் பணியை பெறுவது குற்றம் என்று தெரிந்தும், எப்படியாவது அரசு பணியை பெற்றுவிட வேண்டும் என்ற தவறான எண்ணத்தில், ரூ.12,00,000/-ஐ இரண்டு தவணைகளாக எதிரிகள் 1 முதல் 3 ஆனவர்களிடம் திருத்தணி ரயில் நிலையம் அருகில் கொடுத்து குற்றத்தைப் புரிந்துள்ளனர். எனவே, எதிரிகளான எதிரி-1 திரு.B.திரு.வெங்கடேசன், தலைமையாசிரியர், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, கோபாலகிருஷ்ணாபுரம் கிராமம், திருவாலங்காடு ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் என்பவரும், எதிரி-2 திரு. S.அருள், பட்டதாரி ஆசிரியர் (தமிழ்), ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, சிறுகுமி கிராமம், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் எதிரி-3 திரு.T.V.வெங்கடேசன், துணை முதல்வர், டாக்டர். பி.கெங்குசாமி நாயுடு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர்கள் ஏமாற்றும் நோக்கத்தோடு, அரசு ஊழியர்களான எதிரி-1, 2 மற்றும் தனிநபர் எதிரி-3 ஆகியோர்கள் ஒரு போலியான அரசு வேலை நியமன ஆணையை தயார் செய்து, அதனை உண்மை என நம்பவைத்து ரூ.12 லட்சத்தை அவர்களுடைய சுய லாபத்திற்காக இரு தவணைகளில் லஞ்சமாக பெற்றுக்கொண்டு, வேலையை வாங்கித்தராமல் ஏமாற்றியது குற்றமாகும். எனவே, இம்மார்ஜினில் கண்ட எதிரி-1 திரு.B.வெங்கடேசன் மற்றும் எதிரி-2 திரு.S.அருள் ஆகிய இருவரும், சட்டப்பிரிவு 7 (a) of The Prevention of Corruption (Amendment) Act, 2018 and Sec.406, 420 and 466 IPC-ன் படியும், எதிரி-3 திரு.T.V.வெங்கடேசன் அவர்கள் எதிரி-1, எதிரி-2 மற்றும் எதிரி-4, எதிரி-5 ஆகிய இருதரப்பினருக்கும் இடையே இடைத்தரகராக ஏமாற்றும்

**(FIR content continues to the next page......)**

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.11/AC/2024/TVL, continues......)

நோக்கத்தோடு எதிரி-1 மற்றும் எதிரி-2 ஆகியோர்களுடன் சேர்ந்துக்கொண்டு. எதிரி-4 மற்றும் எதிரி-5 ஆகியோர்களின் வேலையை அரசு ஊழியர்களான எதிரி-1 மற்றும் எதிரி-2 ஆகியோர்கள் மூலம் அவரது தனிப்பட்ட செல்வாக்கை பயன்படுத்தி அரசு ஆசிரியர் வேலையை முடித்து தருவதாக கூறி மேற்படி முதல் 2 எதிரிகளுடன் சேர்ந்து செய்த குற்றங்களுக்கு உடந்தையாக செயல்பட்டது. சட்டப்பிரிவு 7 A of The Prevention of Corruption (Amendment) Act, 2018 and Sec.406, 420 and 466 IPC r/w 109 IPC-ன் படியும். அதேபோல் தனிநபர் எதிரிகளான எதிரி-4 திருமதி.P.S.தேவிகா மற்றும் அவரது கணவர் எதிரி-5 திரு. G.P.நித்தியானந்தம் ஆகியோர்கள். லஞ்சம் கொடுத்து அரசு ஆசிரியர் பணியை பெறுவது குற்றம் என்று தெரிந்தும். எப்படியாவது அரசு பணியை பெற்றுவிட வேண்டும் என்ற தவறான எண்ணத்தில். தாங்கள் கொடுக்கும் பணம் லஞ்சப்பணம் என்று தெரிந்தே எதிரி-1 முதல் எதிரி-3 வரையானவர்களிடம் பணம் ரூ.12,00,000/-ஐ கொடுத்தது. சட்டப்பிரிவு-8 of The Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி குற்றம்புரிந்தவர்களாகின்றனர். மேலும். எதிரி-4 மற்றும் எதிரி-5 இருவரும் பிரிவு-8 ஊழல் தடுப்புச்சட்டம். 2018-ன்படி லஞ்சம் கொடுத்தது குறித்து 7 நாட்களுக்குள் புகார் அளிக்காததாலும். அவர்களை 1 முதல் 3 வரையான எதிரிகள் கட்டாயப்படுத்தி லஞ்சம் பெறாததாலும். அவர்கள் சட்டவிதிகளுக்கு புறம்பாக தவறான வழியல் அரசு ஆசிரியர் பணியை பெற்றுவிடலாம் என்று தெரிந்து லஞ்சம் கொடுத்துள்ளபடியாலும் மேற்படி சட்டப்பிரிவிற்கு எதிராக குற்றத்தைப் புரிந்துள்ளனர்.

ஒப்பம்XXX (G.S.TAMIZHARASI),
Inspector of Police,
V&AC, Thiruvallur.
11.07.2024.

மேற்படி வழக்கினை. இன்று 11.07.2024-ந்தேதி சுமார் 18.00 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் குற்ற எண். 11/ஏசி/2024/திருவள்ளூர் சட்டப்பிரிவுகள் 7(a), 7A & 8 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 and 406,420 & 466 IPC r/w. 109 IPC.,-ன்கீழ் என்னால் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலை. திருவள்ளூர் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கும். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

11/7/2024
(G.S. தமிழரசி)
ஆய்வாளர்,
INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTI
Thiruvallur - 602 001.